## நவம்பர் - 15

**"அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்."**

**- 1யோவா 2 : 6**

தன்னுடைய பொதுவான நடத்தையிலும் நலமான எல்லாவற்றின் சம்பந்தத்திலும் நமது கர்த்தர் நடந்தபடியே அவன் நடக்க வேண்டும். அதற்கு ஒத்ததாக தீமையான எல்லாவற்றையும் விலக்க வேண்டும். அவன் இயேசுவின் அடிச்சுவடுகளில் கூடுமானவரை கிட்டத்தட்ட நடக்க வேண்டும். ஆனபோதிலும் இது ஒரு அபூர்ணமான சரீரத்தில் இருந்துக் கொண்டு மாம்சத்தில் பூரணமாயிருந்த கர்த்தரின் எல்லா பூரணத்தின் அளவின்படியும் நடக்க வேண்டுமென்றோ அல்லது நடக்க கூடுமென்றோ குறிக்கவில்லை. இது எதைச் சொல்லுகிறதோ அதை மட்டும் குறிக்கிறது. அதாவது, அவர் நடந்தது போல நாமும் நடக்க வேண்டும் என்று அதே வழியில், அதே திசையில் அவர் அங்கீகரித்ததும், ஸ்தாபித்ததுமான அதே இலக்கையும் திட்ட அளவையும் நோக்கி நடக்க வேண்டும்.

**- Z '03, 345 (R 3235)**

கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் பிரதிஷ்டையையும், ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பதையும் மட்டுமல்லாமல், பிரதிஷ்டை செய்யப்பட்ட நடத்தையிலும் மனபாங்கிலும், உலகத்துக்கும், தனக்கும் மரித்திருத்தலிலும், தேவனுக்கென்று பிழைத்திருத்தலிலும் தொடர்ந்து ஜீவிப்பதைக் குறிக்கிறது. இயேசு தன்னுடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகளை நிறைவேற்றினார். அவர் தனக்கும், உலகத்துக்கும் செத்து தேவனுக்கென்று பிழைத்திருந்தார். ஆகையால் அவர் தேவனுடைய வார்த்தையை கவனமாக படித்தார். அந்த வார்த்தைக்கு இணக்கமாக விழித்திருந்து ஜெபம் பண்ணினார். அந்த வார்த்தையை எத்திசையிலும் பரவச் செய்தார். அதன்படி நடந்தார். அந்த வார்த்தைக்கு உண்மையுள்ளவராய் இருந்ததினிமித்தமாக பரிசுத்தத்தில் பங்கு அனுபவித்தார். யார் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறானோ, அவன் அவ்விதமாகத் தன்னையே நடத்தவேண்டுவதோடல்லாமல், நிச்சயமாகவே ஆவியிலும், அதே விதமாக பூரணமாக நடக்க வேண்டும். தன்னுடைய விழுந்துபோன மண்பாண்டம் அனுமதிக்கிறபடி மாம்சத்திலும் கிட்டத்தட்ட பூரணமாக நடக்க வேண்டும். பாக்கியமான ஒரு நடை உண்மையாகவே, கிறிஸ்துவினுடைய நடையைப் போலுள்ள நடையாயிருக்கிறது. அவ்விதமாகச் செய்கிறவன் எல்லாவற்றையும் உடையவனாயிருக்கிறான்.

**- P '34, 159.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோவா 15:1-9; 13:15,34; பிலி 2:5-8; 1பேது 2:21-24; மத் 11:29; 20:28; மாற் 10:43-45; லூக் 22:26,27; ரோம 8:29; 15:2,3,5,7; எபே 5:2; 1கொரி 3:13; எபி 12:2-4; 1யோவா 3:16; 4:17; 2யோவா 9; வெளி 3:21; 14:4.

**கோபுர வாசிப்பு** : Z '14, 126 (R 5446).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் கிறிஸ்துவின் மாதிரியில் நடந்தேனா? எந்த சந்தர்ப்பங்களில், அதில் உதவியது எது? இடையூராக இருந்தது எது? பலன் என்ன?